தினமணி 22.12.18

# சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை

## அமைச்சர் பேச்சு

மதுரை, டிச. 22 – மதுரையில் 'பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாடு' என்ற தலைப்பில் ஐந்து மாவட்ட அதிகாரிகள் கலந்தாய்வு கூட்டம் உலக தமிழ்ச்சங்கத்தில் நடந்தது. கலெக்டர் நடராஜன் வரவேற்றார்.

கருப்பணன் பேசியதாவது: ஜெயலலிதா முதல்வராக இருந்த போது திருப்பூர் பகுதியில் 'டை' தொழிற்சாலையில் வெளியேறும் கழிவுகள் மறுசுழற்சி செய்து வாயுவாக மாற்றப்பட்டது. காற்று மாசை தடுத்து முறைப்படுத்தப்பட்டது.

தற்போது பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை முழு அளவில் பின்பற்ற விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

பேரிடர் மேலாண்மை கமிஷனர் ராஜேந்திர ரத்னு பேசுகையில், "பிளாஸ்டிக் பயன்பாட்டால் கடல்சார் உயிரினம் கடுமையாக பாதிக்கின்றன. மஞ்சள் துணிப்பை பயன்படுத்திய தமிழர்கள் மீண்டும் அதற்கு மாற வேண்டும்," என்றார்.

மாசு கட்டுப்பாடு வாரிய முதன்மை செயலாளர் சாம்பு கல்லோலிக்கர், அமைச்சர்கள் செல்லுார் ராஜூ, உதயகுமார், எம்.எல்.ஏ., ராஜன் செல்லப்பா, கலெக்டர்கள் வினய் (திண்டுக்கல்), பல்லவி பல்தேவ் (தேனி), ஜெயகாந்தன்(சிவகங்கை), கணேஷ் (புதுக்கோட்டை), மாநகராட்சி கமிஷனர் அனீஷ் சேகர், மாவட்ட எஸ்.பி.,க்கள் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பங்கேற்றனர்.